எங்களது குறைகளுடன் (ஊனத்துடன்) எங்களை நேசிக்கும் கர்த்தாவே, நாங்கள் இருக்கின்ற நிலையிலேயே எங்களை சிறந்த படைப்பாக மாற்றுபவரே, எங்கள் மீது நம்பிக்கை வைத்து, எல்லோருடைய பயன்பாட்டிற்கும் ஏற்ற வகையிலானான உம்முடைய தோட்டத்தில் எங்களை பணிவிடையாளராக வைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்த அற்புத தோட்டத்தை, எல்லோர் பயன்பாட்டிற்கும் ஏற்ற வகையில் இல்லாத கட்டிடங்களினாலும், தொழில்நுட்பங்களினாலும், புதிய கண்டுபிடிப்புகளாலும் அதன் தன்மையை குலைத்திருக்கிறோம் என்பதை அறிக்கை செய்கிறோம். 'குறைவற்ற' என்கிற பெரும்பான்மை எண்ணத்தால் நீர் படைத்த படைப்பின் நோக்கத்தைப் புறக்கணித்திருக்கிறோம். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் காயங்களை காட்டிலும் அற்புத அடையாளங்களுக்கும், நேர்த்தியானவைகளுக்குமே நாங்கள் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். இத்தகைய மனநிலையை மாற்றி புதிய பார்வையை பெறவும், உமது எல்லா படைப்புகளிலும் மறைந்திருகிற குறைகள் (ஊனத்தை) காண அருள் புரியும்.